**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (7.5.2018) சென்னை, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தில் 50 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் நினைவு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உடல் கடந்த 6.12.2016 அன்று பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தினுள் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் சமாதிக்கு கிழக்கு பகுதியில் காலியாக உள்ள இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆகிய இரு முதலமைச்சர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இவ்விடத்திற்கு பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவிடம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு 6.12.2016 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

உலகத் தலைவர்களின் வரிசையில் ஒருவராக விளங்கிய, மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில், பிரமாண்டமான நினைவு மண்டபம் அமைக்க உலகளாவிய கட்டட கலைஞர்கள் / நிறுவனங்களிடமிருந்து வரைபடங்களை பெறுவதற்கு விளம்பரப்படுத்தப்பட்டு, எல்லோரும் பாராட்டும் வகையில் நிபுணர்கள் குழு மூலம், சிறந்த வரைபடங்களை தேர்வு செய்து நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கடந்த 28.6.2017 அன்று சட்டப்பேரவையில் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடம் அமைப்பதற்காக தனியார் கட்டட கலைஞர்கள் / நிறுவனங்களிடமிருந்து வடிவமைப்பு வரைபடங்கள் பெறுவதற்கு பொதுப்பணித் துறைக்கு ஆணை வழங்கப்பட்டது. இவ்வரைபடங்களை தேர்வு செய்ய பொதுப்பணித் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டது.

மேற்படி வல்லுநர் குழு உறுப்பினர்களுடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடம் அமைப்பதற்கான வடிவமைப்பு வரைபடத்தை தெரிவு செய்யும் கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில், தெரிவு செய்யப்பட்ட வரைபட மாதிரியில் உள்ளவாறு, பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவிட வளாகத்தில் 50 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவு மண்டபத்தை அமைப்பதற்காக 10.1.2018 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவிட வளாகத்தில், 50 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் நினைவு மண்டபத்திற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடம் மற்றும் அதனைச் சார்ந்த கட்டமைப்புகள் சுமார் 50,422 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது. மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடத்தில், ஃபீனிக்ஸ் பறவை வடிவமைப்பில் நினைவுச் சின்னம், அருங்காட்சியகம், அறிவுத்திறன் பூங்கா, கருங்கல்லால் ஆன நடைபாதை வசதி, புல்வெளி மற்றும் நீர் தடாகங்கள், சுற்றுச்சுவர் ஆகியவை அமைக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 7.5.2018